தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>2-ஆவது நாளாக மணிமுத்தாறு அணையில் உபரிநீர் திறப்பு</u>



மணிமுத்தாறு அணை நிரம்பியதைத் தொடர்ந்து, 2-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமை 1,400 கன அடி உபரிநீர் தாமிரவருணி ஆற்றில் திறந்துவிடப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகள் ஏற்கெனவே நிரம்பியுள்ளன. மணிமுத்தாறு அணை சனிக்கிழமை இரவு முழுக் கொள்ளளவை எட்டியதையடுத்து உபரிநீர் திறந்துவிடப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி, மணிமுத்தாறு அணைக்கு நொடிக்கு 2,175 கன அடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து கதவணைகள் வழியாக 1,400 கனஅடி உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. பாசனத்துக்காக பிரதான கால்வாயில் 445 கன அடியும், பெருங்கால் மதகு பாசனத்துக்கு 55 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் 118 அடியாக உள்ளது. பிற அணைகளில்... ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, பாபநாசம் அணைக்கு நொடிக்கு 2,751.76 கன அடி நீர்வரத்து இருந்தது. பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து உபரிநீர் 3,184.17 கன அடி ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 142.10 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 142.29 அடியாகவும் இருந்தது. பாபநாசம் அணையில் மட்டும் 1 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. 50 அடி கொள்ளளவை கொண்ட வடக்குப் பச்சையாறு அணைக்கு நொடிக்கு 269.21 கன அடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 47.25 அடியாக இருந்தது. ஓரிரு நாளில் இந்த

அணையும் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர்: 5 ஆண்டுகளுக்குப் பிறகு மணிமுத்தாறு அணை நிரம்பியதையடுத்து அணையின் 3 கதவணைகள் வழியாக உபரிநீர் தாமிரவருணி ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. மற்றொரு கதவணையில் பழுது காரணமாக தண்ணீர் கசிந்து வெளியேறுகிறது. அணை நிரம்பியதைக் காண மணிமுத்தாறு, சிங்கம்பட்டி, வைராவிகுளம், தெற்கு பாப்பான்குளம், கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம் பகுதியிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் ஞாயிற்றுக்கிழமை அணைக்கு வந்தனர். அணையிலிருந்து வெளியேறும் நீரை தங்களது கைப்பேசி, கேமராக்களில் அவர்கள் படம்பிடித்து மகிழ்ந்தனர். சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் காரணமாக, மணிமுத்தாறு அணை, பூங்கா பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

## கல்லகரத்தில் தடுப்பணை கட்ட ரூ.30 லட்சம் ஒதுக்கீடு

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே கல்லகரத்தில் தடுப்பணை கட்ட மக்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக, தருமபுரி மக்களவைத் தொகுதி உறுப்பினர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார். தருமபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி அருகே உள்ள குமாரசெட்டி ஏரி, அதன் கால்வாய் பகுதிகளை ஞாயிற்றுக்கிழமை நேரில் பார்வையிட்ட தருமபுரி மக்களவைத் தொகுதி உறுப்பினர் அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியது: தருமபுரி மாவட்டத்தில் அண்மையில் அதிக அளவு மழை பெய்தது. இதில், பாலக்கோடு, மாரண்டஅள்ளி பகுதியில் உள்ள ஏரிகளை சரிவரப் பராமரிக்காததால் மழைநீர் பாசனத்துக்கு பயன்படாமல் வீணாக காவிரி ஆற்றில் கலந்தது. குறிப்பாக, குமாரசெட்டி ஏரியில் நீர்வரத்து அதிகரித்ததால், ஏரி உடைந்து தண்ணீர் வெளியேறி காவிரியாற்றில் கலந்தது. கடந்த 40 ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் இந்த ஏரியை கவனிக்காமல் விட்டதின் விளைவாக தற்போது தண்ணீர் வீணாகிறது. மழைக் காலத்தில் தண்ணீர் வீணாவதைத் தடுக்க, முதல்கட்டமாக குமாரசெட்டி ஏரியில் இருந்து

வெளியேறும் தண்ணீரைச் சேமிக்க, கல்லகரத்தில் புதிய தடுப்பணைக் கட்ட வேண்டும். அங்கிருந்து கால்வாய் வழியாக மாரண்டஅள்ளி தடுப்பணை, ஜெர்தலாவ் ஏரி, தும்பலஅள்ளி அணைக்கு இந்த தண்ணீரைக் கொண்டு சென்றால் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 6 ஒன்றியங்கள் பயன்பெறும். மேலும், இந்தத் தண்ணீரை பாப்பாரப்பட்டி, இண்டூர், நல்லம்பள்ளி பகுதிகளில் உள்ள நாகர்கூடல் வழியாக நாகாவதி அணை வரை கொண்டு செல்ல வாய்ப்பு உள்ளது. இதுதவிர, மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளுக்கும் இந்தத் தண்ணீரைக் கொண்டு செல்ல முடியும். இந்தத் திட்டத்தை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். இதற்காக கல்லகரத்தில் தடுப்பணை கட்ட மக்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து முதல்கட்டமாக ரூ.30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளேன். இதற்கான கடிதத்தை மாவட்ட ஆட்சியரிடம் விரைவில் வழங்க உள்ளேன். தமிழக அரசு அறிவித்த ரூ.86 கோடி மதிப்பில் எண்ணேகோல்புதூரிலிருந்து 50 கி.மீட்டர் தொலைவுக்கு கால்வாய் வெட்டி தும்பலஅள்ளி அணைக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டம், தும்பலஅள்ளி, தோனிமடுவு திட்டம் ஆகிய திட்டங்களை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இந்த நிகழ்ச்சியில், மாநில துணைப் பொதுச் செயலர் அ.சரவணன், மாவட்டச் செயலர்கள் சாந்தமூர்த்தி, அரசாங்கம், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் ல.வேலுசாமி, வன்னியர் சங்க மாநிலத் துணைத் தலைவர் பாடி.செல்வம், மாவட்ட ஊராட்சிக் குழு முன்னாள் தலைவர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## <u>திருமருகலில் வெள்ளாடுகள் வழங்கல்</u>

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஒன்றியத்தில் 58 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகளை தமிழ்நாடு மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் சனிக்கிழமை வழங்கினார். திருமருகல் ஒன்றியம், ராராதிமங்கலம், ஷேசமூலையில் கால்நடை பராமாரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் அவர் பேசியது: ஏழைகள் பொருளாதாரத்தில் மேம்பட நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 1950 பேருக்கு ரூ. 6 கோடியே 89

லட்சத்து 65 ஆயிரம் மதிப்பில் 1950 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. நிகழாண்டில் இதுவரை 400 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் 13 ஆயிரத்து 690 பயனாளிகளுக்கு ரூ. 17 கோடியே 58 லட்சத்து 33 ஆயிரத்து 750 மதிப்பில் 54 ஆயிரத்து 760 வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. நிகழாண்டில் இதுவரை 3 ஆயிரத்து 261 பேருக்கு 13 ஆயிரத்து 044 வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன என்றார். விழாவில் ஷேசமூலையைச் சேர்ந்த 34 பயனாளிகள், ராராதிமங்கலத்தைச் சேர்ந்த 24 பயனாளிகள் என 58 பேருக்கு விலையில்லா வெள்ளாடுகளை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் அ. பெஞ்சமின்பாபு, மாவட்ட ஊராட்சித் தலைவர் ஏ.கே. சந்திரசேகரன், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் எஸ். ஆசைமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பள்ளியில் மூலிகை விவசாயம் செய்து கற்றுக்கொடுக்கும் மழலைகள்! மருந்தற்ற வாழ்விற்கு அச்சாரம் விதைப்பு**



பொள்ளாச்சி : பொள்ளாச்சி அருகே அரசுப்பள்ளியில், மாணவர்கள் ஆசிரியர்கள் உதவியுடன் மூலிகைச்செடிகளை நட்டு பராமரித்து வருகின்றனர். மேலும், பெற்றோரிடம் அதன் பயன்பாடு குறித்து விளக்கமளித்து வருகின்றனர். உண்ணும் உணவே மருந்து என வாழ்ந்த மூதாதையர்கள், மருந்து, மாத்திரைக்கு பதிலாக, மூலிகை செடிகளையே பயன்படுத்தி, நோயை குணமாக்கி வந்தனர். நாகரிக மாற்றம் ஏற்படாத அந்த காலத்தில், மூலிகையின்

பயன்பாட்டினை அறிந்த மூன்னோர்கள், அதனை வளர்த்து வந்ததுடன், எந்த நோய்க்கு எந்த மூலிகை சாப்பிட்டால் நல்லது என தெரிந்து, அதனை சாப்பிட்டு, ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தனர். கீரை உள்ளிட்ட சத்து வகையான காய்கறிகளையும் உணவில் சேர்த்து சாப்பிடுவது வழக்கமாக இருந்தது. பின், காலப்போக்கில், சத்தான உணவுகளை உண்ணாமல், நாகரிக மாற்றம் என்ற பெயரில், கொஞ்சம் கொஞ்சமாக உடலுக்கு தீங்கு தரக்கூடிய உணவு வகைகளை சாப்பிட துவங்கினர். விளைவு, பெயர் தெரியாத நோய்கள் தினமும் முளைத்து வருகின்றன. சத்தான காய்கறிகள் மட்டுமின்றி, மூலிகைச்செடிகளின் பயன்பாட்டினையும் அறியாத இளைய தலைமுறையினர், சிறு உடல் நலம் சரியில்லா விட்டாலும், ஆங்கில வழி மருத்துவத்தை நாடி, மாத்திரை, மருந்துகளை உட்கொள்வது வழக்கமாகி வருகிறது. மேலும், டாக்டர்கள், மாத்திரை, மருந்து கொடுத்தாலும், சத்தான உணவுகளை சாப்பிடவும்; கீரை சேர்த்துக் கொள்ளுங்கள்,' போன்ற அறிவுரைகளை கூற தயங்குவதில்லை. மெல்ல... மெல்ல... மறைந்து வரும் மூலிகைப்பயன்பாடு குறித்து மாணவர்களிடையே விளக்கும் வகையில், பொள்ளாச்சி அருகே ஒரு பள்ளி மாணவர்கள் மூலிகை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பொள்ளாச்சி அருகேயுள்ளது ஆர்.பொன்னாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி. இப்பள்ளியில், 120 மாணவர்கள் படித்து வருகின்றனர். பள்ளி வளாகத்திற்குள் நுழையும் போதே, மூலிகைச்செடிகள் அழகாய் நின்று நம்மை வரவேற்கிறது. இப்பள்ளி மாணவர்களிடையே படிப்பு மட்டுமின்றி, மூதாதையரின் வாழ்க்கை முறை, மூலிகை பயன்பாடு குறித்து அவ்வப்போது ஆசிரியர்கள் தெரிவித்து வருகின்றனர். இதில், பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் உதவியோடு, மூலிகைச்செடிகளை நட்டு வருகின்றனர். அதில், பொது ஆரோக்கியத்திற்கு உகந்த திருநீர் பத்தினி, நோய் எதிர்ப்பு சக்தி தரும் துளசி, நினைவாற்றலை வளர்க்கும் வல்லாரை, கண்ணிற்கு உகந்த நந்தியா வட்டம், சளி, கபம் சரி செய்யும் கற்பூர வல்லி உள்ளிட்டவைகளை நட்டு வளர்த்து வருகின்றனர். மாணவர்களே தினமும் அந்த செடிக்கு தண்ணீர் விட்டு வளர்த்து வருகின்றனர்.

மேலும், பள்ளியில், மாணவர்களை கொண்டு சுகாதார குழு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழு மூலம் பெற்றோரிடம் மூலிகை பயன்பாடு குறித்து விளக்கப்படுகிறது. மூலிகையின் மகத்துவம் குறித்து இளைய தலைமுறையிடம் விளக்கும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

**சிறுமுயற்சிதான்...**

பள்ளி ஆசிரியர்கள் கூறியதாவது: மாணவர்களிடம் கல்வி கற்பிப்பதோடு, உடல்நலம் பேணுவது குறித்தும் விளக்கப்படுகிறது. அதில், பாட்டி வைத்தியம், கை வைத்தியம் என பெயர் பெற்ற மூலிகை வைத்தியம் குறித்து மாணவர்களிடையே தினசரி விளக்கப்பட்டு வருகிறது. அதில், ஒரு கட்டமாக மாணவர்களே மூலிகை செடிகளை நட்டு வளர்த்து வருகின்றனர். மேலும், பள்ளியில், அமைக்கப்பட்ட சுகாதார குழுவினர் வாரத்தில், மதிய உணவு வேளையின் போது, ஒரு நாள் ஒரு மாணவரது வீட்டிற்கு சென்று, பெற்றோரிடம் மூலிகை பயன்பாடு குறித்து விளக்குவதுடன், புகைபிடிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கும் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர். மாணவர்கள் ஆரோக்கிய வாழ்விற்காக இந்த சின்ன அளவிலான முயற்சியை மேற்கொண்டுள்ளோம். இவ்வாறு ஆசிரியர்கள் கூறினர். பள்ளி வளாகத்தில் இந்த சின்ன அளவிலான மூலிகை பண்னை அமைக்கப்பட்டுள்ளது வரவேற்கதக்கது. இந்த திட்டம் மூலம் மூலிகை பயன்பாடு மாணவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## கரும்பு சாகுபடி பயிற்சி முகாம்

பென்னாகரம்: பென்னாகரம் அடுத்த, கோடுப்பட்டியில், நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த, பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நடந்த, முகாமை பென்னாகரம் வேளாண்மை உதவி இயக்குனர் கணேசன் தொடக்கி வைத்தார். கரும்பு சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு அலுவலர்

மல்லேஸ்வரன், உதவி அலுவலர் சென்னகேசவன், சொட்டு நீர் பாசன அலுவலர் சுரேஷ் ஆகியோர் நவீன கரும்பு சாகுபடி குறித்து பேசினர். வேளாண்மை உதவி அலுவலர்கள் மாதேஸ், முருகேசன் உட்பட விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை, வேளாண்மை விரிவாக்க சீரமைப்புத் திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கணபதி, ஜெயம் ஆகியோர் செய்தனர்.

## <u>கிணற்று பாசன விவசாயிகள் நிம்மதி</u>

தியாகதுருகம்: மழை காரணமாக கோமுகி, மணிமுக்தா ஆற்று படுகையில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் கிணற்று நீர் பாசன விவசாயிகள் நிம்மதியடைந்துள்ளனர். பருவமழை கடந்த 2 ஆண்டுகளாக ஏமாற்றியதால் கள்ளக்குறிச்சி பகுதியில் நீர்வளம் குறைந்து விவசாயம் பாதித்தது. கிணற்று நீர் பாசன விவசாயிகள் பயிர்களை காப்பாற்ற முடியாமல் தவித்தனர். இப்பகுதி யின் முக்கிய நீர் ஆதாரமான கோமுகி, மணிமுக்தா அணைகள் நிரம்பவில்லை. ஆயக்கட்டு பாசன பகுதியில் பயிர் சாகுபடி பரப்பு குறைந்தது. கடந்த அக்., மாதம் பெய்த கனமழை காரணமாக கோமுகி அணை நிரம்பியது. மணிமுக்தா அணையில் நீர்மட்டம் உயர்ந்தது. கோமுகி ஆற்றில் திறந்த உபரி நீரால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தடுப்பனைகளும் நிரம்பின. மணிமுக்தா ஆற்றிலும் நீரோட்டம் ஏற்பட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் ஆற்றுப்படுகையில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந் தது. கிணற்று நீர் பாசனத்தை நம்பிய விவசாயிகள் நிம்மதியடைந்துள்ளனர். கரும்பு, நெல், மஞ்சள், மரவள்ளி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மகசூல் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

## <u>நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி</u>

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் நாட்டுக்கோழி குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி நடந்தது. அறிவியல் ரீதியான ஆட்டினங்களை தேர்வு செய்தல் மற்றும்

இனப்பெருக்கம், ஆடு வளர்ப்பில் பராமரிப்பு முறைகளான பரண் மேல் கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, ஆடுகளுக்கேற்ற பசுந்தீவன உற்பத்தி, மேய்ச்சல் தரை அமைப்பு, ஆடுகளை தாக்கும் நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், மூலிகை மருத்துவ சிகிச்சை முறைகள், அசோலா வளர்ப்பு, மலிவு விலை கலப்பு தீவன தயாரித்தல், பண்ணை பொருளாதாரம், விற்பனை உத்திகள், வங்கி கடன் உதவி, மற்றும் பண்ணைக்கான காப்பீடு குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியாளர்கள் மணல்மேடு ஆட்டு சந்தை, நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரியில் அமைந்துள்ள அறிவியல் ரீதியான கால்நடை மற்றும் கோழி பண்ணை, தனியார் கோழி குஞ்சு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். நிறைவு விழாவில், நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் பார்த்திபன் , கரூர் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன் , கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையின் மண்டல இணை இயக்குநர் பழனிவேலு மற்றும் உதவி இயக்குநர், குழந்தை சாமி ஆகியோர், நபார்டு வங்கியின் கால்நடை வளர்ப்பு திட்டங்கள், வங்கி கடன் உதவி, தமிழக அரசின் கால்நடை வளர்ப்பு திட்டங்கள் குறித்து பேசினர். பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ், பயிற்சி கையேடு, தாது உப்பு கட்டி, தீவன மரக்கன்றுகள் ஆகியன வழங்கப்பட்டன. பயிற்சி மைய பேராசிரியர் அகிலா மற்றும் மருத்துவர் பாரதி ஆகியோர் ஏற்பாடுகளை செய்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மஞ்சள் குவிண்டால் ரூ.15,000க்கு ஏலம்</u>**



ஆத்தூர்: சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சனிக்கிழமை இரவு மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், சேலம், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அவற்றை ஏலம் எடுக்க தமிழகத்தின் அனைத்து பகுதியிலிருந்தும் வியாபாரிகளும் குவிந்தனர். இதில், 737 மூட்டை ரூ.32.70 லட்சத்திற்கு விற்பனையானது. விரலி குவிண்டால் ரூ.6,130 முதல் ரூ.8,499 வரையிலும், உருண்டை மஞ்சள் ரூ.5,490 முதல் 7,639 வரையிலும், பனங்காளி மஞ்சள் ரூ.11,899 முதல் ரூ.15,009 வரையிலும் ஏலம் போனது.

## <u>சங்கீதவாடி கிராமத்தில் இலவச ஆடுகள் வழங்க பயனாளிகள் தேர்வு</u>

ஆரணி, : சங்கீத வாடி கிராமத்தில் இலவச ஆடுகள் வழங்க பயனாளிகள் தேர்வு நடைபெற்றது. ஆரணி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த சங்கீதவாடி ஊராட்சியில் தமிழக அரசின் இலவச ஆடுகள் வழங்க பயனாளிகளை தேர்வு செய்வதற்காக சிறப்பு கிராமசபா கூட்டம் நேற்று முன்தினம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கே.சதாசிவம் தலைமையில் நடைபெற்றது. இதில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில் 37 பயனாளிகளை தேர்வு செய்தனர். மேலும் 6 பேரை காத்திருப்போர் பட்டியலில் வைத்தனர். தேர்வு செய்யப்பட்டது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, கிராம நிர்வாக அலுவலர் கோபால், கால்நடை மருத்துவர் ஜெயஸ்ரீ, ஊராட்சி மன்ற துணைதலைவர் சங்கரிசகாதேவன், உறுப்பினர்கள் சின்னராஜ், அம்சா, கங்கா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஆரணி அடுத்த சங்கீதவாடி கிராமத்தில் இலவச ஆடுகளுக்கான பயனாளிகளை தேர்வு செய்ய கிராம சபா கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கே.சதாசிவம் தலைமையில் நடைபெற்றது.

## மீண்டும் பலத்த மழை எதிரொலி அணைகளில் நீர் மட்டம் உயர்வு

மஞ்சூர், : நீலகிரி மாவட்டத்தில் மீண்டும் பெய்து வரும் பலத்த மழையால் அணைகளில் நீர் மட்டம் அதிகரித்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு அணைகளில் தேக்கி வைக்கப்படும் நீரின் மூலம் 12 நீர் மின்நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதில் குந்தா மின்நிலையத்தில் 60 மெகா வாட், கெத்தை மின்நிலையத்தில் 175 மெகாவாட், பரளி மின்நிலையத்தில் 180 மெகாவாட், பில்லுபீர் மின்நிலையத்தில் 100 மெகா வாட், அவலாஞ்சி மின்நிலையத்தில் 40 மெகாவாட், காட்டுகுப்பை மின்நிலையத்தில் 30 மெகாவாட், சிங்காரா புஷ்ஷப் மின்நிலையத்தில் 150 மெகாவாட், பைக்காரா மின்நிலையத்தில் 59.2 மெகாவாட், பைக்காரா மைக்ரோ மின்நிலையத்தில் 2 மெகாவாட், முக்குறுத்தி மினி மைக்ரோ மின்நிலையத்தில் 0.70 மெகாவாட், மோயார் மின்நிலையத்தில் 36 மெகாவாட் மற்றும் மரவகண்டி மின்நிலையத்தில் 0.75 மெகா வாட் மின்சாரம் என மாவட்டத்தில் உள்ள மின்நிலையங்கள் மூலம் மொத் தம் 833.65 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகிறது. மின்சார உற்பத்திக்கு பின் மின்நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் நீரானது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. இது மட்டுமின்றி கோவை, ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கிய பவானி பாசன பகுதிகளின் விவசாய தேவைகளுக்கும் முக்கிய நீராதாரமாக உள்ளது. இந்நிலையில் கடந்த சில மாதங்களாக பரவலாக நல்ல மழை பெய்து வந்தது. இடையில் சில நாட்கள் மட்டும் மழை ஓய்ந்திருந்த நிலையில் தற்போது மீண்டும் நல்ல மழை பெய்து வருகிறது. குறிப்பாக அணைகட்டுகள் மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மாவட்டத்தில் மின்சார உற்பத்திக்கு நீராதாரங்களாக உள்ள அனைத்து அணைகளுக்கும் நீர் வரத்து அதிகரித்துள்ளதுடன் அணைகளின் நீர்மட்டம் மள, மளவென உயர்ந்து வருகிறது. நீர் வரத்து அதிகரித்துள்ளதால்

குந்தா, கெத்தை, பரளி உள்ளிட்ட பெரும்பாலான நீர் மின் நிலையங்களிலும் மின்சார உற்பத்தி தீவிரமடைந்துள்ளது.

## பச்சைபாசி படர்வதால் மண்ணில் காற்றோட்டம் தடை: பயிர்களில் வளர்ச்சி குறைகிறது

திருச்சி,: பச்சைபாசி வயல்களில் பாய்போல் படர்வதால் மண் ணில் காற்றோட்டம் தடைப்பட்டு பயிர்களின் வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்படுவதாக வயல் ஆய்வில் தெரிய வந்தது. திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி வட்டாரத்தில் சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் அசோகன் மற்றும் உதவி பேராசிரியர் ரவிச்சந்திரன் ஆகியோர் புள்ளம்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மணிவண்ணன் தலைமையில் நெல்வயல்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது புள்ளம்பாடி வட்டார துணை வேளாண்மை அலுவலர் ரபீக்ஜான், உதவி வேளாண் மை அலுவலர்கள் செல்வம், ராஜராஜன் ஆகியோர் உடன் சென்றனர்.ஆய்வுக்கு பின் அவர்கள் கூறுகையில், புள்ளம்பாடி வட்டாரத்தில் நெல் வயல்களில் பச்சைபாசி பிரச்சினை தென்படுவதால் பாசியால் பாதிக்கப்பட்ட வயல்களில் பாய்போல் படர்ந்து மண்ணில் காற்றோட்டம் தடைப் பட்டு பயிர்களின் வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்படுகிறது. மேலும் நெற்பயி ருக்கு இடப்படும் மேல் உரம் மண் ணில் படாமல் தடுக்கப்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த பாசிபடர்ந்த வயல்களில் ஒரு கிலோ காப்பர் சல் பேட்டை 25 கிலோ மணலு டன் கலந்து சீராக தூவ வேண்டும். காப்பர் சல்பேட் இட்ட பிறகு 3 நாட்களுக்கு வயலில் தண்ணீரை கட்டவோ, வடிக்கவோ கூடாது. 3 நாட்களுக்கு பிறகு நன்றாக நீரை தேக்கி, பின் வடித்து விடவும். இவ்வாறு செய்வதன் மூலம் பாசியின் வளர்ச்சி தடைப்பட்டு மண்ணில் காற்றோட்டம் ஏற்படுவதன் மூலம் பயிர் வளர்ச்சியை அதிகப்படுத்தலாம். இலைசுருட்டுப்புழு, தீவிரதாக்குதலின் போது முழு வயலும் வெண் மையான நிறத்தில் காய்ந்தது போல் காட்சி அளிக்கும். மேலும் தண்டுதுளைப்பான் தாக்குதலுக்கு உள்ளான குருத்து காய்ந்து விடும். கதிர் விடும் பருவத்தில் தாக்குதல் ஏற்படின் வெண்கதிர்கள் தோன்றும். பிடுங்கினால் கையோடு வந்துவிடும். இலை சுருட்டு புழு, தண்டுதுளைப்பான் தாக்குதலை

கட்டுப்படுத்த தழைசத்து தரக்கூடிய யூரியாவை, வேப்பம் புண்ணாக்கு மற்றும் ஜிப்சத்துடன் கலந்து இடவும். கார்போபியூரான் 3ஜி போரேட் 10ஜி போன்ற குருணை மருந்துகளை தவிர்க்க வேண்டும். வரப்புகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நெல்குலைநோய் பாதிக்கப்பட்ட வயல்களில் கதிர்கள் காய்ந்து, நெல் மணிகள் பால் பிடிக்காமல் வெண் கதிர்களாக மாறிவிடும். தாக்குதலுக்குட் பட்ட நெல் மணிகள் நிறம் மாறி பதராக மாறிவிடும். இவற்றை கட்டுப்படுத்த டிரைசைக்ளோசோல் 75டபுள்யுபி 120கிராம் அல்லது காப்பன்டாசிம் 200 கிராம் மருந்தினை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். பாக்டீரியா இலை கருகல் நோய் விதை, பாசனநீர், மலைசாரல் மூலம் பரவுகிறது. மேலும் நிழல், நெருக்க நடவு, அதிக தழைசத்து, மழை மற்றும் மந்தமான வானிலை இந்நோய் பரவ சாதகமான சூழ்நிலைகள் ஆகும். இந் நோயை கட்டுப்படுத்த 20சதவீத பசுஞ்சாண கரைசலை 10நாட்கள் இடை வெளியில் 3முறை தெளிக்கவும் என்றார்.

## <u>திருச்சி மண்டலத்தில் பால் உற்பத்தி 7,500 லிட்டராக அதிகரிப்பு</u>

திருச்சி, : திருச்சி மண்டலத்தில் கறவை பசுக்கள் எண்ணிக்கை அதிகரித்த தோடு தினசரி 7,500 லிட்டருக்கு மேல் பால் உற்பத்தியாவதாக கலெக்டர் தெரிவித்தார். இதுகுறித்து கலெக்டர் ஜெயஸ்ரீ கூறுகையில், திருச்சி மண்டலத்தில் விலையில்லா கறவை பசுக் கள் வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 1,350 கறவை பசுக்கள் ரூ.4.65 கோடி மதிப்பில் வாங்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இக்கறவை பசுக்கள் அனை த்தும் வெளிமாநிலங்களில் இருந்து வாங்கப்பட்டதால் பசுக்களின் எண்ணி க்கை கூடியதோடு, பால் உற்பத் தியும் நாள் ஒன்றுக்கு 7,500 லிட்டர் வரை அதிகரித்துள்ளது. நடப்பு நிதியாண் டில் 5 கிராம ஊராட்சிக ளுக்கு ரூ.87.93 லட்சம் மதிப் பில் 247 விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டன. இவைகள் இது வரை 1,648 கன்றுகளை ஈன்றுள்ளன. கால்நடைகளுக்கு தேவை யான பசுந்தீவனங் கள் வழங் கும் பொருட்டு 100 சதவீதம் மானியத்தில்

900 ஏக்கர் பரப்பளவில் 2,099 விவசாயிகள் மூலம் ரூ.1.07 கோடி மதிப்பில் தீவனப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள் ளது. 75 சதவீத மானியத்தில் 190 பயனாளிகளுக்கு ரூ.36 லட்சம் மதிப் பில் மழைத்தூவான் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளது என்றார். அந்தநல்லூர் நிர்மலா பரிமளம் கூறுகையில், 2011ல் ஒரு கிடாவும், 3 பெட்டை ஆடுகளும் வழங்கப்பட்டது. இதில் இது வரை இந்த ஆடுகள் 26 குட் டிகள் ஈன்றுள்ளன. அவற் றில் 7 பெட்டை ஆடுகளும், 7 கிடா ஆடுகளும் ரூ.50, 000ம் வரை விற்பனை செய்துள்ளேன் என்றார். பலூர் மணிமேகலை கூறுகையில், விலையில்லா மல் ஒரு பசு பெற்று தற் போது இரண்டு பசுக்கள் ஆகிவிட்டது. இப்பசுவின் மூலம் தினமும் சராசரியாக 7 முதல் 8 லிட்டர் வரை பால் கறக்கிறேன். கால்நடை மருத்துவர்கள் எங்கள் கற வை பசுக்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் என்றார். கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மோகனரங்கன், துணை இயக்குநர்கள் சுந்தர்ராஜன், துரைசாமி, கால்நடை மருத்துவர் பிரபா பிரியதர்ஷினி மேரி ஆகியோர் உடனிருந்தனர். திருச்சி மண்டலத்தில் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், கடந்த 3ஆண்டுகளில் 237 கிராம ஊராட்சிகளில் வசிக்கும் 14,991 பெண்களுக்கு ரூ.19கோடி மதிப்பில் 59,964 வெள்ளாடுகள் வழங்கப்பட்டன. நடப்பு நிதியாண்டில் 84 கிராம ஊராட்சிகளில் வசிக்கும் 5,539 பெண்களுக்கு ரூ.7.31 கோடியில் 22,156 வெள்ளாடுகள் இது வரை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆடுகள் இதுவரை மொத்தம் 80, 812 குட்டிகள் ஈன்றுள்ளன. சிறந்த முறையில் ஆடுகளை பராமரிக்கும் பயனாளிகளுக்கு பசுந்தீவனங்கள் ரூ.3,000ம் மதிப்பில் பரிசுகளாக வழங்கப்படுகிறது.

## கரும்பு விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.35,000 இடுபொருள் மானியம்

கரூர், : கரூரில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கரும்பு விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.35 ஆயிரம் இடுபொருட்கள் மான்யமாக வழங்கப்பட உள்ளது என கலெக் டர் ஜெயந்தி தெரிவித்தார். கரூர் மாவட்ட கலெக் டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி தலைம வகித்தார். டிஆர்ஓ அருணா, வேளாண் இணை இயக்குனர் தெய்வேந்திரன், முன்னிலை வகித்தனர். விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்து கலெக்டர் பேசுகையில், கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 652.2 மிமீ. இதுவரை 558.6 மிமீ மழை மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. சராசரி மழை அளவைக் காட்டிலும் 15சதம் குறைவாகவே பெறப்பட்டுள்ளது. மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வடகிழக்கு பருவமழை நன்றாக பெறப்பட்டுள்ளதால் சிறுதானிய பயிர் கள், பயறுவகை பயிர்கள், எண்ணைவித்து பயிர்கள் 35,218 எக்டேரில் மானா வாரி பயிராக சாகுபடி செய்யப்பட்டு பயிர்கள் அறு வடை நிலையில் உள்ளது. சம்பா பருவ நெல்சாகுபடி 12,443 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு வளர்ச்சி மற்றும் பூப்பருவத்த்தில் உள்ளது. அனை த்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், தனி யார் உரக்கடைகளில் யூரியா 713 டன், டிஏபி 374 டன். பொட்டாஷ் 876டன், கலப்பு உரங்கள் 756 டன் இருப்பில் உள்ளது. நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டே ருக்கு ரூ.35ஆயிரம் மதிப்பிலான இடுபொருட்கள் மானியத் தில் வழங்கப்படவுள்ளது. வேளாண் பொறியியல் துறையில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் வேளாண் கருவிகள் 50சதம் மானிய விலையில் வழங் கிட பொதுப்பிரிவினருக்கு ரூ.30.79 லட்சமும், ஆதிதிராவிட சிறப்பு பிரிவினருக்கு ரூ.12.50 லட்சமும் அரசு நிதி ஒதுக்கி வழங்கிஉள்ளது. முதல்வரின் சிறப்புத்திட்டத்தின் கீழ் 7எண்கள் 50சதத்தில் அதாவது ரூ.2 லட்சம் மானயத்தில் சோ லார் உலர்த்தி (சோலார் டிரையர்) அரவக்குறிச்சி, குளித்தலை வட்டங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. தேவைப் படும் விவசாயிகள் வேளாண் பொறியி யல் துறையினரை அணுகி பெற்றுக் கொள்ளலாம் எனக்கூறினார்.

## முந்திரி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி

அரியலூர், : அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியம் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையம் மற்றும் கோகோ வளர்ச்சி இயக்குனரகம் சார்பில்

முந்திரி விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. அரியலூர் மாவட்ட தோட்டக்கலை துறை துணை இயக்குனர் சுப்பையா தலைமை வகித்து பயிற்சி முகாமை அவர் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், முந்திரி சாகுபடி குறித்து ஆலோசனை மற்றும் அரசின் திட்டங்களை எடுத்து கூறினார். மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலா முந்திரியின் பரப்பு மற்றும் உற்பத்தி திறன், முந்திரி உற்பத்தி குறைவதற்கான காரணம் பற்றி கருத்துக்களை வழங்கினார். முந்திரியில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து அந்த மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுனர் ராஜா ஜோஸ்லின் கருத்துக்கள் வழங்கினார். முந்திரியில் பதப்படுத்தும் முறை குறித்து மனயியல் தொழில்நுட்ப வல்லுனர் உமாசந்திரா பயிற்சி அளித்தார். இப்பயிற்சியில், அரியலூர் மாவட்டத்தில் முந்திரி சாகுபடி செய்யும் 50 விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். முடிவில், மைய ஒருங்கினைப்பாளர் நீலகண்டன் நன்றி கூறினார்.

## <u>புதுகையில் மீண்டும் கொட்டித் தீர்த்தது மழை</u>

மழைஅளவுமில்லிமீட்டரில்:

ஆலங்குடி- 1.30, அறந்தாங்கி- 6, கீரனூர்- 1, புதுக்கோட்டை- 2, அரிம ளம்- 1, திருமயம்- 2.90, விராலிமலை- 15.20, இலுப் பூர்- 6, ஆயிங்குடி- 6.40, நாகுடி- 4.80, கட்டுமாவடி- 12, ஆவுடையார்கோவில்- 18.40, ஆதனக்கோட்டை- 2, மீமிசல்- 24.30, மணமேல்குடி- 8, அன்னவாசல்- 2, குடுமியான்மலை- 8, பொன்னமராவதி- 3.40, காரையூர்- 6, கீழாநிலை- 2 என மாவட்டத்தில் 132.70 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சராசரியாக 5.31 மி.மீ. மழை பெய்துள்ளது. புதுக்கோட்டை, : புதுக்கோட்டையில் 3ம் நாளாக நேற்று கொட்டித் தீர்த்தது மழை. தொடர்ந்து பெய்த மழையால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியதால் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் பெரிதும் அவதிப்பட்டனர். புதுக்கோட்டை மாவட் டம் முழுவதும் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இரவு முதல் மழை விட்டு, விட்டு பெய்தது. நேற்று முன்தினம் இரவு 12 மணி முதல் மழை விட்டுவிட்டு பெய்தது. இந்நிலையில் நேற்று காலை 10 மணி முதல்

மதியம் 1 மணி வரை இடைவிடாமல் 3 மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இதனிடை யே, தெற்கு 4ம் வீதியில் சாக்கடை செல்லும் வாய்க்காலில் ஏற்பட்ட அடைப்பால் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு மழை நீருடன் கழிவு நீரும் உள்ளே புகுந்தது. மேலும் தெற்கு 4ம் வீதியில் குளம் போல் மழை நீர் தேங்கி நின்றதால் அவ்வழியாகச் சென்ற பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் பெரிதும் சிரமப்பட்ட னர். அத்துடன் தேங்கிக் கிடந்த கழிவு நீரால் அப்பகுதியில் துர்நாற்றமும் வீச தொடங்கியது. புதுக்கோட்டை மாவட் டம் முழுவதும் நேற்று காலை முதல் பரவலாக பலத்த மழை பெய்தது. புதுக்கோட்டையில் பிற்பகலிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து அவ்வப்போது விட்டு விட்டு மழை பெய்தது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் புதுக்கோட்டை நகரின் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடிய நகரில் பல்வேறு பகுதிகளில் சாலையின் நடுவே உள்ள பள்ளங்களில் தேங்கி நின்றது. தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தற்போது மழை பெய்து வருவதால் பல்வேறு பகுதிகளில் உள்ள வறண்டுக் கிடந்து குளங்களில் தற்போது சிறிதளவு மழை நீர் தேங்கத் தொடங்கி உள்ளது.

## திருந்திய சாகுபடி முறையில் தரமான நெல் விதைகளை உற்பத்தி செய்வதுஎப்படி?

அறந்தாங்கி, : திருந்திய நெல் சாகுபடி முறையில் தரமான நெல் விதைகளை எவ்வாறு உற்பத்தி செய்வது? என்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட் டம், அறந்தாங்கி அடுத்த ஆவுடையார்கோவில் வட் டார வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கான விதை கிராம திட்டம் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சி முகாமுக்கு ஆவுடையார்கோவில் வேளாண் உதவி இயக்குநர் அடைக்கப்பன் தலைமை வகித்தார். வேளாண் தொழில்நுட்ப மேலாண் திட்ட தலைவர் கூத்தையா முன்னிலை வகித்தார். பயிற்சி முகாமில் ஆவுடையார்கோவில் வட்டார முன்னோடி விவசாயிகள் மற்றும் இதர

சாகுபடியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முகாமில், திட்டத்தின் நோக்கம், செயல்பாடுகள் குறித்து வேளாண் உதவி இயக்குநர் அடைக்கப்பன் விளக்கினார். மேலும், திருந்திய நெல் சாகுபடி முறையில் தரமான நெல் விதைகளை எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது குறித்தும், அதற் கான தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளித்தார். இதைத் தொடர்ந்து, வேளாண் உதவி விதை அலுவலர் நடராஜன் நல்ல விதைகளை எவ்வாறு உற் பத்தி செய்யும் முறை, நவீன தொழில்நுட்பம், விதை தேர்வு செய்தல், விதை நேர்த்தி, நெல் விதை உற்பத்திக்கு ஏற்ற பருவம் தேர்வு செய்தல், விதை அளவு, உயர் விளைச்சல் ரகங்கள், பயிர் விலகு தூரம், உர நிர்வாகம், பயிர் பாதுகாப்பு நிர்வாகம், அறுவடை மற்றும் விதை சேமிப்பு தொடர்பான கருத்துகளை விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் வேளாண் அலு வலர் செல்லசுவாமி வேளாண் தொடர்பான அரசின் திட்டங்கள், அதனை பெற மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் ஆகியன குறித்து விவசாயிகளிடம் விரிவாக எடுத்துரைத்தார். முடிவில் முகாமில் பங்கேற்று பயிற்சி பெற்ற கொண்டு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்பட்டதோடு தொழில்நுட்ப கருத்துகள் அடங்கிய வேளாண் கையேடுகள் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை துணை வேளாண் அலுவலர் முல்லை, உதவி வேளாண் அலுவலர்கள் சரவணன், கோபாலகிருஷ்ணன், மற்றும் அட்மா வடடார தொழில்நுட்ப அலுவலர்கள் நாகராஜன், துரைராஜ், பிரபுராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

## 26ம் தேதி விவசாயிகள் குறை தீர் கூட்டம்

தஞ்சை, : தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் 26ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடக்கும் இக்கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட உள்ளது. கூட்டத்தில் நீர்பாசனம், கால்நடை, கூட் டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற

விவசாயம் தொடர் பான கருத்துக்களை மட்டும் தெரிவிக்கலாம். கூட்டத்தில் பேச காலை 8.30 மணி முதல் 10 மணி வரை தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் 2 பேர் கருத்துக்களை தெரிவிக்கலாம். விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் கணினியில் பதிவு செய்து ஒப்புதல் பெற்று பின்னர் மனுக் களை அளிக்க கலெக்டர் சுப்பையன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தொடர் சாரல் மழை

மதுரை, : மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் தொடர்ந்து சாரல் மழை பெய்து வருகிறது. மதுரை மாவட்டம் மேலூர், திருமங்கலம், வாடிப்பட்டி மற்றும் தேனி, சிவகங்கை, திண்டுக்கல் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் கடந்த 2 நாட் களாக தொடர்ந்து சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் சில இடங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. தேனி மாவட்டத்தில் வருசநாடு, வெள்ளிமலை, மேகமலை உள்ளிட்ட பல பகுதியில் கன மழை பெய்ததால் வைகை அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நேற்று 1,477 கன அடி தண்ணீர் வந்தது. இதில் 1,860 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட் டது. வைகை அணையில் 31.63 கன அடி தண்ணீர் இருப்பில் உள்ளது.

## 50 சதவீத மானியத்தில் விசை களையெடுப்பான் கருவி வேளாண் அதிகாரி தகவல்

தேவகோட்டை, : வேளாண் விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானியத்தில் விசை களையெடுப்பான் கிடைப்பதால், விவசாயிகள் வாங்கிப் பயன் பெறலாம் என வேளாண் அதிகாரி கூறினார். சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குனரகம், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் திருந்திய நெல் சாகுபடி பண்ணைப்பள்ளி பயிற்சி நடந்தது. தேவகோட்டை அருகே உள்ள பாவனக்கோட்டை விவசாயி ராஜலிங்கத்தின் வயலில் நேரடி பயிற்சி நடந்தது. வட்டார வேளாண் உதவி இயக்குநர் பாஸ்கரமணியன் பேசுகையில்,

“திருந்திய நெல் சாகு படி தொழில் நுட்பத்தால் அதிக சிம்புகள் வெடித்து மகசூல் அதிகம் பெற முடியும். விசைக் களையெடுப்பானைக் கொண்டு களை எடுக்கும்போது ஒரு ஏக்கர் நிலத்தில் களை எடுக்க ஒரு மணி நேரம் போதுமானது. இதற்கு ஒரு லிட்டர் பெட்ரோல் மட்டுமே செலவாகிறது. ஒரு முறை இயந்திரம் மூலம் களை எடுக்க ரூ. 750 மட் டுமே செலவாகிறது. தற் போது வேளாண் விரி வாக்க மையத் தில் 50 சதவீத மானியத்தில் விசை களையெடுப்பான் கிடைக்கிறது“ என்றார். பயிற்சியில் உதவி வேளாண் அலுவலர்கள் சிக்கந்தர்பாட்ஷா, தியாகராஜன் பங்கேற்றனர். பயிற்சி ஏற்பாடுகளை அட்மா மேலாளர் தமிழ்ச்செல்வி, உதவி மேலாளர்கள் சந்திரசேகரன், சரவணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>கால்நடை நோய் கருத்தரங்கு நிறைவு</u>

புதுச்சேரி, : புதுச்சேரி கால்நடை நலத்துறை கருத்தரங்க கூடத்தில் நடந்த தென்னிந்திய மாநிலங்களின் நோய்கள் ஆய்வுறுதி ஆராய்ச்சி கூட குழு தலைவர்களின் 2ம் காலாண்டு கருத்தரங்கம் நேற்று நிறைவடைந்தது. கடந்த 17ம் தேதி தொடக்கிய இக்கருத்தரங்களில் தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, கேரளா, லட்சத்தீவு மற் றும் புதுவையை சேர்ந்த மாநில குழுத்தலைவர்கள் 15 பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவ கல்லூரி பேராசிரியர் மூலம் குடற்புழு நீக்க மருந்துகளின் எதிர்ப்பாற்றல் திறன் கண்டறிதல் உள்ளிட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. இதனை தென் னிந்திய மாநிலங்களின் நோய்கள் ஆய்வுறுதி ஆராய்ச்சி கூட தலைவர் டாக்டர் வெங்கடேசா பயிற்சி முறை மேற்பார்வையிட்டார். பின்னர் நடந்த நிறைவு விழாவில் டாக்டர் வெங்க டேசா பேசியதாவது, கருத்தரங்கம் சிறப்பாக நடந்துள்ளது. புதுவையில் நோய்களை கண்டறிவதற் கான சோதனை கூடத் தில் போதிய வசதிகள் இல்லை. எனவே நவீன வசதியுடன் கூடிய சோதனை கூடம் அமைக்க வேண்டும். அப்போது தான் நோய்களின் தன்மை குறித்தும், மருந்துகளின் எதிர்ப்பு சக்தி குறித்தும் சிறப்பாக ஆய்வு செய்ய வேண்டும். எனவே நவீன சோதனை கூடம் அமைக்க அரசு உதவ வேண்டும் என

பேசினார். கால்நடை பராமரிப்பு, கால்நடை துறை இயக்குநர் பத்மநாபன், கால்நடை மருத்துவர்கள் ஷோபா ராணி, ஸ்ரீபட், பிரசாத் உட்பட மாநில குழு தலைவர்கள்கலந்துகொண்டனர்.

**அதிக பனிப்பொழிவால் சம்பா, தாளடி நெற்பயிரில் நெற்பழ நோய் தாக்குதல்**

நாகை, : சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் முனைவர் ராஜேந்திரன், பூச்சியியல் துறை உதவி பேராசிரியர்கள் இளையபாரதி, அழகர் ஆகி யோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை: நாகை மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் அதிகளவு பனிப்பொழிவு, மிக குறைந்த பகல்நேர வெப்ப நிலையால் சம்பா, தாளடி பயிர்களில் நெற்பழ நோய் வேகமாக பரவி வருகிறது. இந்நோய் ஒருவகை பூஞ்சாணத்தால் ஏற்படுகிறது. இந்நோய் பால்பிடிக்கும் தருணம் முதல் முற்றிய நிலையில் உள்ள கதிர்களை தாக்கி சேதத்தை ஏற்படுத்தும். இந்நோயில் பூஞ்சாண வித்துக்கள் நெல் மணிகளில் முழுவதுமாக நிரம்பி இருக்கும். நோயால் தாக்கப்பட்ட நெல் மணி களின் வெளிப்பகுதி பசுமை நிறத்திலும், உட்பகுதி மஞ்சள் நிறம் கலந்த ஆரஞ்சு நிறமாகவும் காணப்படும். இதன் தாக்குதலால் தானியம் மற்றும் விதைகளின் தரம் வெகுவாக குறையும். இந்நோயை வரும் முன் தடுக்க, பயிர்கள் தண்டுருளும் பருவத்திலும், மீண்டும் 15 நாட்கள் கழித்தும் ஏக்கருக்கு சூடோமோனாஸ் ஒரு கிலோ அல்லது புரபிகோணசோல் 200 மி.லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்தலாம். இந்நோயை ஆரம்ப நிலையை கண்டறிந்து நோய் தாக்கிய கதிர்களை அகற்றுதல், காற்றின் மூலம் பூஞ்சாண வித்துக்கள் பரவுவதை தடுக்கலாம். நெற்பழ நோயால் தாக்கப்பட்ட நெல்மணிகளை மீண்டும் விதைக்காக பயன்படுத்தக்கூடாது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### புதிய ஆண்டில் விவசாயிகளுக்கு தனி காலண்டர் வெளியிடப்படும் கலெக்டர் சுரேஷ்குமார் அறிவிப்பு

புதிய ஆண்டில் விவசாயிகளுக்கென தனி காலண்டர் வெளியிடப்படும் என்று விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் கலெக்டர் எஸ்.சுரேஷ்குமார் அறிவித்தார்.

குறைகேட்புக்கூட்டம்

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக்கூட்டம் கடலூரில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் கலெக்டர் எஸ்.சுரேஷ்குமார் புதிய அறிவிப்புகளை வெளியிட்டுபேசியதாவது:-

விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். அகில இந்திய அளவில் பயறுவகை உற்பத்தியில் சிறந்த மாநிலத்துக்கான 'கிருஷி கர்மான் விருது' தமிழ்நாட்டுக்கு கிடைத்திருக்கிறது. இந்த விருதை பெற்றதில் கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கும் முக்கிய பங்கு உள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் இணைந்து செயல்பட்டால் இன்னும் பல விருதுகள் நம்மைத்தேடி வரும்.

புதியஆண்டில்காலண்டர்

புதிய ஆண்டில் (2015) வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கென தனி காலண்டர் வெளியிடப்போகிறோம். இந்த காலண்டரில் எந்தெந்த மாதத்தில் என்னென்ன விவசாய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற தகவல்கள் இடம் பெற்றிருக்கும். இது முன்கூட்டியே விவசாய பணிகளை திட்டமிடுவதற்கு உதவியாக இருக்கும். இந்த காலண்டரை வேளாண்மைத்துறை அதிகாரிகள் தயாரித்து வருகிறார்கள். தயாராகி வந்ததும் விவசாயிகளிடம் காண்பிக்க ஏற்பாடு செய்கிறேன். விவசாயிகள் அதில் என்னென்ன சேர்க்க வேண்டும்

என்று சொன்னால், அவற்றையும் சேர்த்து புதிய ஆண்டில் காலண்டரை வெளியிடுவோம்.

செல்போனில்குறுந்தகவல்

இதேப்போல் விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த தகவல்களை செல்போன் மூலம் குறுந்தகவல்களாக (எஸ்.எம்.எஸ்.) அனுப்பி வருகிறோம். இதில் வேளாண்மை விற்பனைத்துறை சம்பந்தப்பட்ட செய்திகளையும் சேர்க்க உள்ளோம். மின்சாரம் சம்பந்தப்பட்ட தகவல்களையும் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். அதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

அறுவடைஇயந்திரங்கள்

நெல் அறுவடை தொடங்க இருப்பதால் தேவையான அறுவடை இயந்திரங்களை வெளிமாவட்டங்களில் இருந்து வரவழைக்க ஏற்பாடு செய்து வருகிறோம். விவசாயிகள் கேட்கும் இடங்களில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். எருமனூர் அருகே மணிமுக்தாற்றின் குறுக்கே ஒரு மீட்டர் உயரத்தில் தடுப்பணை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்யப்படும். விருத்தாசலம் தாலுகா கொம்பாடியில் என்.எல்.சி. சுரங்க மண்ணை நிலங்களுக்கு போட்டால் பயிர் நன்றாக செழித்து வளருவதால், அந்த மண்ணை எடுத்துச்செல்ல வருவாய்த்துறை அனுமதி வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள், அதுதொடர்பாக விருத்தாசலம் உதவி கலெக்டர் உரிய நடவடிக்கை எடுப்பார். பயிர்க்கடன் கூடுதலாக வழங்கப்படும் கம்மாபுரம் பகுதியில் வனவிலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க வனத்தைச்சுற்றிலும் வேலி அமைப்பது பற்றி வனத்துறையினர் ஆய்வு செய்வார்கள். அரசின் சார்பில் வழங்கப்படும் விலையில்லா ஆடு, மாடுகளை விற்பது கிரிமினல் குற்றமாகும். அவ்வாறு விற்றவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்படும். சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் தொழிற்சாலை தொடங்குவதற்கு மாசுகட்டுப்பாட்டு வாரியம் அனுமதி அளிக்க மறுத்து விட்டது. இதில் அரசின் ஆலோசனையை பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்படும். ரிசர்வ் வங்கி பயிர்கடன் வழங்குவதை அதிகரிக்குமாறு அறிவுறுத்தியுள்ளதன் பேரில் கடந்த ஆண்டு 20 சதவீதமாக இருந்த பயிர்க்கடன்

இலக்கை இந்த ஆண்டில் 22 சதவீதமாக அதிகரித்துள்ளோம். இவ்வாறு கலெக்டர் எஸ்.சுரேஷ்குமார் பேசினார். கூட்டத்தில் வேளாண்மை இணைஇயக்குனர் தனசேகரன், நபார்டு வங்கி பொதுமேலாளர் ராஜகோபால், வேளாண்மை துணைஇயக்குனர் அரிதாஸ், ராமலிங்கம், வேளாண்மை அதிகாரி பூவராகவன், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அருள்காந்தி மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்

## மல்லிகை பூ விலை உயர்வு கிலோ ரூ.1500–க்கு விற்பனை



குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் நெல்லை, மதுரை, கேரளா உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படும். பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்கப்படுகிறது. எப்போதும் மார்க்கெட்டில் வியாபாரிகள் கூட்டம் அலைமோதும். இந்த நிலையில் நேற்று மற்ற பூக்களை விட மல்லிகை பூவின் விலை அதிகமாக காணப்பட்டது. நேற்று முன்தினம் ரூ.800–க்கு விற்கப்பட்ட மல்லிகை பூ, நேற்று ரூ.1500–க்கு விற்பனை செய்யப்பட்டது. பிச்சி 625 ரூபாய்க்கும், முல்லை 500 ரூபாய்க்கும், கனகாம்பரம் 200 ரூபாய்க்கும், வாடாமல்லி 50 ரூபாய்க்கும், சம்பங்கி 40 ரூபாய்க்கும், கோழிப்பூ 40 ரூபாய்க்கும், சிவந்தி 80 ரூபாய்க்கும், வெள்ள சிவந்தி 100 ரூபாய்க்கும், அரளி 80 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## அணைப்பகுதிகளில் சாரல் மழை பேச்சிப்பாறைக்கு 1121 கனஅடி தண்ணீர் வந்தது

குமரி மாவட்ட அணைப்பகுதிகளில் பலத்த மழை பெய்ததைத் தொடர்ந்து பேச்சிப்பாறை அணைக்கு நேற்று 1121 கனஅடி தண்ணீர் வந்தது.

சாரல்மழை

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு நாகர்கோவில் உள்பட பல இடங்களில் தொடங்கிய சாரல்மழை விடிய விடிய பெய்தது. காலை 6 மணி நிலவரப்படி குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

பேச்சிப்பாறை–18, பெருஞ்சாணி–6.8, சிற்றார் (1)–20, சிற்றார் (2)–17.4, இரணியல்–6.4, ஆனைக்கிடங்கு–5, குளச்சல்–10.6, குருந்தன்கோடு–4.6, அடையாமடை–2, கோழிப்போர்விளை–4, முள்ளங்கினாவிளை–7, புத்தன்அணை–7.4, திற்பரப்பு–6.2, நாகர்கோவில்–6.8, பூதப்பாண்டி–5.2, சுருளோடு–20, கன்னிமார்–1.5, ஆரல்வாய்மொழி–8, பாலமோர்–6.3. 1121கனஅடிதண்ணீர்

மாவட்டத்தில் அதிகபட்சமாக சிற்றார் 1 அணைப்பகுதியில் 20 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. அணைப்பகுதிகளில் சற்று பலத்த மழை பெய்ததால் அணைகளுக்கு தண்ணீர் வரத்து நேற்று அதிகரித்தது. பேச்சிப்பாறை அணைக்கு நேற்றைய காலை நிலவரப்படி வினாடிக்கு 1121 கனஅடி தண்ணீர் வந்தது. பெருஞ்சாணிக்கு 200 கனஅடியும், சிற்றார் (1) அணைக்கு 18 கனஅடியும், சிற்றார் (2) அணைக்கு 31 கனஅடியும் தண்ணீர் வந்தது. பாசனத்துக்காக பேச்சிப்பாறை அணையில் இருந்து 650 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் இருந்து 115 கனஅடி தண்ணீரும் வெளியேற்றம் செய்யப்பட்டது. மாம்பழத்துறையாறு அணை நிரம்பி வழியும் நிலையிலேயே தொடர்ந்து இருக்கிறது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணையில் நேற்று 24.20 அடி தண்ணீர் இருந்தது. இந்த பகுதியில் 2 மி.மீட்டர் மழை பதிவானது.

## <u>பிலிக்கல்பாளையம் மார்க்கெட்டில் வெல்லம் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி</u>



பிலிக்கல்பாளையம் வெல்ல மார்க்கெட்டில் வெல்லம் விலை உயர்ந்து உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.
விலைஉயர்வு
பரமத்தி வேலூர் தாலுகா பகுதியில் ஏராளமான ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் கரும்புகள் சோழசிராமணி, ஜேடர்பாளையம், பிலிக்கல்பாளையம், அய்யம்பாளையம், ஆனங்கூர், கபிலர்மலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வெல்லம் காய்ச்சும் ஆலைகளுக்கு வெட்டப்படுகிறது. ஆலைக்கூடங்களில் வெல்லத்தில் இருந்து சாறு எடுத்து அதில் இருந்து உருண்டை மற்றும் அச்சு வெல்லங்களாக தயார் செய்கின்றனர். தயார் செய்யப்படும் வெல்லங்கள் 30 கிலோ கொண்ட சிப்பங்களாக கட்டப்பட்டு பிலிக்கல்பாளையத்தில் உள்ள வெல்ல ஏல சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டு ஏலம் விடப்படுகிறது. பிலிக்கல்பாளையம் ஏல சந்தைக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் வந்து செல்கின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் ரூ.950 முதல் ரூ.1030 வரை ஏலம் போனது. அச்சு வெல்லம் ரூ.950 முதல் ரூ.1050 வரை ஏலம் போனது. இந்த நிலையில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் ரூ.950 முதல் ரூ.1100 வரையில் ஏலம் போனது. அச்சு வெல்லம் ரூ.950 முதல் ரூ.1070 வரை ஏலம் போனது. தற்பொழுது பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதால் அதிக அளவில் வியாபாரிகள் ஏலம் எடுப்பதற்கு வந்திருந்தனர்.
விவசாயிகள்கோரிக்கை
கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தமிழக அரசு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பண்டிகைக்கு இலவசமாக பொங்கல் பொருட்கள் வழங்க, பிலிக்கல்பாளையம் வெல்ல ஏல சந்தையில் இருந்து வெல்லத்தை மொத்தமாக கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு வினியோகம் செய்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக பொங்கல் பொருட்கள் வழங்குவதற்கு பிலிக்கல்பாளையம் வெல்ல ஏல சந்தையில் இருந்து வெல்லம் கொள்முதல் செய்யப்படவில்லை. எனவே தமிழக அரசு பிலிக்கல்பாளையம் வெல்ல ஏல சந்தையில் இருந்து

வெல்லத்தை கொள்முதல் செய்ய வேண்டும் என கரும்பு விவசாயிகளுக்கும், வெல்லம் உற்பத்தியாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## <u>பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் இருந்து 4,500 கனஅடி தண்ணீர் வெளியேற்றம் சேர்வலாறு ஒரே நாளில் 2 அடி குறைந்தது</u>



விக்கிரமசிங்கபுரம், பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் இருந்து வினாடிக்கு 4,500 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி குறைந்தது.

<u>பாபநாசம் அணை</u>

நெல்லை மாவட்டத்தில் பாபநாசம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த ஒரு சில வாரங்களாக மிதமானது முதல் பலமானது வரை மழை பெய்தது. இதனால் ஏற்கனவே நிரம்பி உள்ள பாபநாசம், சேர்வலாறு அணையில் இருந்து வெளியேறும் உபரிநீர் வீணாக கடலுக்கு சென்றது. இந்த நிலையில் நேற்று காலையில் பாபநாசம் அணைப்பகுதியில் மட்டும் ஒரு மில்லி மீட்டர் மழை பெய்தது. நேற்று முன்தினம் 142.15 அடியாக இருந்த அணையின் நீர்மட்ட மானது நேற்று 142.10 அடியாக குறைந்தது. வினாடிக்கு 2,751.76 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து 3,184.17 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

<u>10அடிகுறைந்தது</u>

மற்றொரு அணையான சேர்வலாறு அணை நேற்று முன்தினம் 144.26 அடியாக இருந்தது. நேற்று 142.29 அடியாக குறைந்தது. அதாவது ஒரே நாளில் 2 அடி குறைந்து உள்ளது. சமீபத்தில் பெய்த பருவமழையால் அணையின் நீர்மட்டம் 152 அடியை தொட்டது. கடந்த சில நாட்களாக அணையில் இருந்து

தேவையின்றி உபரிநீர் திறந்து விடப்பட்டது. இதன் எதிரொலியாக அணையின் நீர்மட்டம் 10 அடி குறைந்தது. அப்பகுதி மக்கள் அணையின் நீரின் அளவை குறைப்பதற்கான காரணம் குறித்து தெரியாமல் உள்ளனர். இதுகுறித்து அதிகாரிகளும் சரியான பதில் தெரிவிக்க மறுக்கிறார்கள்.

பொதுமக்கள்கோரிக்கை

தொடர்ந்து அணையில் இருந்து சுமார் 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேறிக் கொண்டு இருப்பதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்தாலும், தாமிரபரணி ஆற்றில் தொடர்ந்து 5 ஆயிரம் கனஅடிக்கு மேல் தண்ணீர் வந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட வண்ணம் உள்ளது. இதே நிலை தொடர்ந்து நீடித்தால், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் மீண்டும் 140 அடிக்கு கீழே வந்து விடும். ஆகவே பொதுப்பணித்துறை அதிகாரிகள் குறைந்தபட்சம் 150 அடி தண்ணீர் தேக்கி வைத்து அதன்பின்னர் உபரிநீரை வெளியேற்ற வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

மணிமுத்தாறு அணை

மாவட்டத்தின் மற்றொரு பிரதான அணையான மணிமுத்தாறு நேற்று முன்தினம் இரவு தனது முழுகொள்ளளவான 118 அடியை எட்டியது. தற்போது, அணைக்கு 1,380 கனஅடி நீர் வந்து கொண்டு இருக்கிறது. 3 மதகுகள் வழியாக 900 கனஅடி நீரும், பிரதான கால்வாய் மூலம் 400 கனஅடியும், பெருங்கால் மூலம் 45 கனஅடியும் தண்ணீர் வெளியேறிக் கொண்டு இருக்கிறது. தொடர்ந்து மழைநீடித்தால் அணைக்கு வரும் நீர் அப்படியே வெளியேற்றப்படும். ஏற்கனவே பாபநாசம் அணையில் இருந்து உபரிநீர் வெளியேறிக் கொண்டு இருக்கிறது. தற்போது, மணிமுத்தாறு அணையில் இருந்து உபரிநீர் வெளியேறப்பட்டு வருவதால் தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதனால் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.